**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**MCOP.204/2023**

2025 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 30 ஆம் நாள் வியாழன் கிழமை எ.ம.சா.1 இந்திய சாட்சி சட்டத்தின் கீழ் திருமதி. மகாலெட்சுமி Gr.II Bench Clerk அவர்களால் சாட்சியிடம் சத்திய பிரமாணம் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர்: | ஆதித்ய விஸ்வா | த/பெ.: | சேதுராஜன் |
| கிராமம்: | தஞ்சாவூர் | தாலுக்கா: | தஞ்சாவூர் |
| மதம்: | இந்து | தொழில்: | நிர்வாக அதிகாரி, நியூ இந்தியா அசூரன்ஸ் கம்பெனி, தஞ்சாவூர். |
| வயது: | 25 | முகவரி: | தஞ்சாவூர் |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of – 1873 on day of 30.10.2025.

**முதல் விசாரணை:–**

நான் இந்த மனுவில் 2ம் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி ஆவேன். நான் எனது முதன்மை சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| ம.சா.ஆ.1 | 26.07.2014 | முதல் எதிர்மனுதாரரின் வாகன காப்பீடு | அலுவலக நகல் |
| ம.சா.ஆ.2 | 14.05.2015 | TN 10 E 2265 பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை | நகல் |
| ம.சா.ஆ.3 | 14.05.2015 | TN 04 J 9393 பதிவு எண் கொண்ட வாகனத்தின் மோட்டார் வாகன அறிக்கை | நகல் |

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவிற்கு எங்கள் நிறுவனம் காப்பீடு தொகை கொடுக்க கடமைப்பட்டவர் அல்ல என்பதால் இந்த எதிர்மனுதாரரை வழக்கிலிருந்து விடுவிக்கும் படி பிரார்த்திக்கிறேன்.

<u>**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை:–**</u>

இந்த வழக்கை பொறுத்து எங்கள் நிறுவனத்தில் புலனாய்வு அலுவலரை நியமித்துள்ளோம் என்றால் சரிதான். அவ்வாறு புலனாய்வு அலுவலரின் ஆய்வு அறிக்கையை நாங்கள் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இந்த விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. மேலும், நான் என்னுடைய அலுவலக கோப்புகளிலிருந்து நான் சாட்சியம் அளிக்கிறேன். சம்பவ இடத்தில் உள்ள சாட்சிகளின் வாக்குமூலங்கள் எதையும் நாங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. முதல் தகவல் அறிக்கையை நான் படித்து பார்த்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் கயிறு அவிழ்ந்துவிட்டது என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் கொடுத்துள்ள முதல் விசாரணை நிரூபண வாக்குமூலத்தில் கயிறு அறுந்ததால் என்று தவறுதலாக குறிப்பிட்டுள்ளேன் என்று சொன்னால் சரியல்ல. கயிறு அறுந்ததாக சொல்வதற்கு எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் ஏதேனும் உள்ளதா என்றால் இல்லை. நான் உண்மையை மறைத்து நீதிமன்றத்தில் சாட்சி அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சம்பந்தப்பட்ட 1ம் எதிர்மனுதாரரின் வாகனத்திற்கு எங்கள் நிறுவனத்தில் முறையாக காப்பீடு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். வாகன ஓட்டிக்கு ஓட்டுநர் உரிமத்தில் பேட்ச் போடவில்லை என்று காரணம் காட்டியுள்ளோம் என்றால் சரிதான். நான்கு சக்கர வாகனமான காரானது TN 31 AJ 6798 என்ற லாரி மீது

மோதியதாக கூறப்பட்டுள்ளதை பொறுத்து எங்கள் நிறுவனத்திடம் எழுத்துப்பூர்வமான ஆதாரங்கள் ஏதும் இல்லை என்றால் சரிதான். 1ம் எதிர்மனுதாரரின் வாகனம் ஆகிய லாரி தான் விபத்திற்கு முழு காரணம் என்று சொன்னால் சரியல்ல. எங்கள் வாகனத்தை பொறுத்து மோட்டார் வாகன விதி 396–ன் கீழ் ஏதும் விதி மீறல் இல்லை என்றால் சரிதான். வாகன விதி மீறல் இருப்பதாக சொல்லப்பட்ட இரு வாகனமும் எங்களிடம் காப்பீடு செய்யப்படவில்லை என்றால் சரிதான். மோட்டார் வாகன சட்ட விதி மீறல்கள் இருந்தால் அது அபராதத்திற்கு உள்ளது தான் என்று சொன்னால் எனக்கு தெரியாது. இந்த விபத்திற்கு காரணம் எங்கள் நிறுவனத்தில் காப்பீடு செய்யப்பட்டுள்ள 1ம் எதிர்மனுதாரரின் ஓட்டுநர் தான் காரணம் என்பதனால் எங்கள் நிறுவனம் இழப்பீடு மனுதாரருக்கு கொடுக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு சம்பந்தப்பட்ட வாகனத்தின் காப்பீடு சம்பந்தமாக ஒப்பந்தம் எங்கள் நிறுவனத்திற்கும், 1ம் எதிர்மனுதாரருக்கும் இடையில் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். எங்கள் நிறுவனத்தை பொறுத்தவரை மனுதாரர் 3ம் தரப்பினர் என்றால் சரிதான். காப்பீட்டு விதி மீறல்கள் ஏதேனும் இருப்பின் அது மனுதாரரை கட்டுப்படுத்தாது என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை :– இல்லை</u>**

Typed down to my dictaion, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.